காருக்கும் நம் ராஜ்ய சர்க்காருக்கும் ஏதாவது அபிப்பிராய பேதங்கள் ஏற்பட்டிருக்கின்றனவா ?

(ஆ) ஹரிஜனங்கள் நீங்கலாக மற்றெல்லா ஜாதிகளுக்கும் ஏழ்மை நிலைமையை அனுசரித்து சர்க்கார் மூலம் உதவி அளிப்பது பற்றிய பரிசிலனையின் விவரங்கள் யாவை ?

THE HON. SRI P. KAKKAN : (a) The Government of India have suggested that the classification of certain Backward Classes as Most Backward and extending to them all those educational concessions, which are admissible to the Scheduled Castes may be done away with. The suggestion is under consideration of this Government.

(b) The matter is still under consideration.

SRI P. G. MANICKAM : இந்த விஷயத்தில் இன்னும் எவ்வளவு காலத்திற்குள்ளாக ஒரு முடிவுக்கு வரலாம் என்பதை கனம் அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

THE HON. SRI P. KAKKAN : இப்பொழுது சொல்வதற்கு இல்லை.

SRI K. SATTANATHA KARAYALAR : தற்சமயம் குறிப்பிட்டிருக்கக் கூடிய மிகவும் பின்தங்கிய சமுதாயம் என்பது எந்த அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டது ?

THE HON. SRI P. KAKKAN : சமுதாயத் துறையிலும், பொருளாதாரத் துறையிலும் மிகவும் பின்தங்கிய அடிப்படையை வைத்துக்கொண்டுதான் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

SRI K. VINAYAKAM : "பாக்வேர்டு கிளாஸஸ் கமிஷன்" அறிக்கையின்படி மத்திய சர்க்கார் ஏற்றுக்கொண்ட "மோஸ்டு பாக்வேர்டு கிளாஸஸ் அண்டு அதர் பாக்வேர்டு கிளாஸஸ்" என்று சொல்லப்படுகின்ற இருதரப்பட்ட மக்களுக்கும் தனித்தனியே சலுகைகள் தரப்படவேண்டுமென்று சொல்லுகின்ற கருத்தை இந்த சர்க்கார் ஏற்றுக் கொண்டதா ? அப்படியிருந்தால், எந்தவிதமான பிரத்தியேக சலுகைகள் "மோஸ்டு பாக்வேர்டு கிளாஸஸ் ஸ்டூடண்டுகளுக்கு" தரப் படுகின்றன ?

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினர் இதுபற்றி தனியாகக் கேள்வி போட்டால் விவரமாக பதில் சொல்ல முடியும்.

Discharged Prisoners.

*522 Q.—SRI P. G. MANICKAM : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) சென்னை ராஜ்யத்திலே விடுதலையடைந்த கைதிகளுக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் தாற்காலிக அடைக்கல நிலையங்கள் ஒவ் வொன்றின் பராமரிப்புக்காகவும் 1958–59-ல் செலவிடப்பட ஒதுக்கப் பட்டிருக்கும் தொகை எவ்வளவு ?

(ஆ) ஒவ்வொரு விடுதிகளிலும் 1957-ம், 1958-ம் வருஷங்களிலே எத்தனை விடுதலையான கைதிகள் பராமரிக்கப்பட்டார்கள் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : A statement[a] is placed on the table of the House.

SRI P. G. MANICKAM : தற்பொழுது வெளியிடப்பட்டிருக்கும் பட்ஜெட் அறிக்கையிலே 'டைரக்டர் ஆப் இண்டஸ்டிரீஸ்' 'வுட்வொர்க்-

[a] Printed as Appendix on page 217 infra.

கம்-என்ஜினியரிங் வொர்க்ஷாப்' 2 லட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்து வதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட பயிற்சி நிலையங்களை மற்ற 'ஆப்டர்கேர்' நிலையங்களிலும் ஏற்படுத்துவதுபற்றி சர்க்கார் பரிசீலனை செய்துவருகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பொதுவாக கைத் தொழில் பயிற்சி அளிக்கப்பட்டு அவர்கள் சீராக வாழ்க்கை நடத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் என்ன செய்யக்கூடுமோ அது செய் யப்பட்டுத்தான் வருகிறது.

SRI A. A. RASHEED : For how long these discharged prisoners are maintained in these institutions?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I am sorry I cannot give the information as to the exact period for which they are kept in these institutions.

SRI A. GOVINDASAMY : மத்திய சிறையிலுள்ள அச்சடிக்கும் தொழிற்சாலைகளில் குற்றவாளிகள் அந்தத் தொழிலில் ஈடுபட்டு வேலை செய்து சம்பாதிக்கிறார்கள். அவர்களுக்கு ஏதோ கூலி கொடுப்பதாக கணக்கு எழுதி வருகிறார்கள். அவர்கள் விடுதலையாகி வெளியே வருகின்ற நேரத்தில் அவர்கள் எதிர்கால வாழ்க்கைக்கு உதவிகரமாக அவர்கள் எவ்வளவு சம்பாதித்தார்கள் என்பதைக் கணக்கிட்டு அந்தத் தொகையை அவர்களுக்கு கொடுத்து உதவி செய்ய சர்க்கார் முன்வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அவ்வாறு ஒன்றும் யோசனையில்லை. இப்பொழுது இருக்கும் சிறை விதிகளின்படி அவர்களுக்கு என்ன சலுகைகள் அளிக்கப்படுமோ அவைகள் அளிக்கப்பட்டு வருகின்றன. அவர்கள் சிறையிலிருந்து வெளிவந்தபிறகும், அவர்கள் அந்தத் தொழிலில் ஈடுபட்டு வேலை செய்வதற்கும் "டிஸ்சார்ஜ் பிரிஸனர்ஸ் எய்ட் சொஸைடி" மூலம் கவனம் செலுத்தப்பட்டுவருகிறது.

Tamil Nad N.G.O. Union

* 523 *Q.*—SRI M. P. SARATHI : கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

தமிழ்நாடு என். ஜி. ஓ. யூனியன் பொதுநல நிதிக்கு (Common Good Fund) 1957–ம், 1958–ம் ஆண்டுகளில் அரசாங்கம் ஒதுக்கிய உதவித் தொகை எவ்வளவு ?

THE HON. SRI C. SUBRAMANIAM : There was no Government contribution in 1957 and 1958 to the Common Good Fund of the Tamil Nad Non-Gazetted Government Officers' Union.

SRI A. GOVINDASAMY : அதற்கு முந்திய வருஷங்களில் இந்த சகாய நிதி அளிக்கப்பட்டதா?

THE HON. SRI C. SUBRAMANIAM : 1954. 1955, இந்த வருஷங்களில் அளிக்கப்பட்டிருக்கிறது.

SRI A. GOVINDASAMY : அப்படியிருக்கும்பொழுது, அதைத் தொடர்ந்து அளிக்காமல் பின்வரும் ஆண்டுகளில் நிறுத்தியதற்குக் காரணம் என்ன?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதின் மூலமாக உதவி வழங்கப் படுவது மிகவும் குறைவாக இருந்தது, அதன் காரணமாகத்தான் பின்னர் இந்தத் தொகை வழங்கப்படவில்லை. இப்பொழுது நியமிக்கப்பட்டிருக்கும் 'பே கமிஷன்' இந்த விஷயத்தையும் கவனித்து ஆலோசனை சொல்லுவார் கள் என்று எதிர்பார்க்கிறேன்.